செய்தி வெளியீடு எண்: 212 நாள்: 05.03.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (5.3.2019) தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் விழுப்புரம் மாவட்டம் – திருநாவலூரில் 13 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாட்டின் 16 மாவட்டங்களில் 285 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 33 துணை மின் நிலையங்களையும் திறந்து வைத்தார்கள்.

மின்பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பையும், மின்பராமரிப்பு செலவினங்களையும் குறைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற உச்சகட்ட மின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சரியான மின் அழுத்தத்துடன் மக்களுக்கு சீரான மின்சாரம் வழங்கிட கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், விழுப்புரம் மாவட்டம் – திருநாவலூரில் 13 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், கடலூர் மாவட்டம் – நெய்வேலியில் அமைக்கப்பட்டுள்ள 230/110 கி.வோ. துணை மின் நிலையம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – அதவத்தூரில் அமைக்கப்பட்டுள்ள 110/11 கி.வோ. துணை மின் நிலையம்; திருப்பூர் மாவட்டம் – இந்திராநகரில் அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையம்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – தொகரப்பள்ளி மற்றும் இராயக்கோட்டை, மதுரை மாவட்டம் – செக்காணூரணி (விகிதாச்சார அறிமுகம்), திருநெல்வேலி மாவட்டம் – கலிங்கப்பட்டி (விகிதாச்சார அறிமுகம்), கோயம்புத்தூர் மாவட்டம் – மாதம்பட்டி (விகிதாச்சார அறிமுகம்), திருவண்ணாமலை மாவட்டம் – சேத்துப்பட்டு (விகிதாச்சார

அறிமுகம்), வேலூர் மாவட்டம் – விண்ணமங்களம் (விகிதாச்சார அறிமுகம்) ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – பண்ணந்தூர், சிகரலப்பள்ளி, கூச்சூர், சின்னார் மற்றும் A. செட்டிப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – பாலகிருஷ்ணம்பட்டி, மதுரை மாவட்டம் – அ.கொக்குளம், திருநெல்வேலி மாவட்டம் – திருவேங்கடம், திருவண்ணாமலை மாவட்டம் – வந்தவாசி, வேலூர் மாவட்டம் – தாமரைபாக்கம் மற்றும் ஆணைமல்லூர், திண்டுக்கல் மாவட்டம் – சின்னலுப்பை; புதுக்கோட்டை மாவட்டம் –அன்னவாசல், தருமபுரி மாவட்டம் – பைசுஹள்ளி மற்றும் அனுமந்தபுரம், நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் நகரம், காஞ்சிபுரம் மாவட்டம் – நாவலூர், திருவள்ளூர் மாவட்டம் – கூடப்பாக்கம், ஈரோடு மாவட்டம் – கரட்டுப்புதூர், புஞ்சைதுறையம்பாளையம் மற்றும் கருமாண்டி செல்லிபாளையம், கடலூர் மாவட்டம் – கொத்தட்டை (பரங்கிப்பேட்டை) மற்றும் புவனகிரி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

என மொத்தம் 298 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 34 துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**